# தி.மு.க.வின் சுயமரியாதையைக் காப்பாற்ற ஸ்டாலின் முன் வருவாரா? எதிர்க்கட்சி துணைத் தலைவர் உதயகுமார் பேச்சு

மதுரை. செப். 19

மதுரை மாவட்டம் திருமங்கலம் தொகுதி கல்லுப்பட்டி ஒன்றியத்தில் உள்ள மறவப்பட்டியில் 10 லட்சம் ரூபாய் மதிப்பில் சட்டமன்ற உறுப்பினர் பொதுநிதியின் கீழ் சுற்றுச்சுவர் அமைக்க பணி நடைபெற்றது. இதனை சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் தொடக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தமிழரசன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் பிரபு சங்கர், கண்ணன், ராமையா, மாநில எம் ஜி ஆர் மன்ற துணைச் செயலாளர் ஏகேபி . சுப்பிரமணியன், மாவட்ட அணி நிர்வாகிகள் மகேந்திர பாண்டி, சிவசக்தி, பொதுக்குழு உறுப்பினர் சுமதி சாமிநாதன், ஊராட்சி மன்ற தலைவர் மாரீஸ்வரி நாகலெட்சுமி உட்பட பலர் கலந்து கொண்டனர்

ஆர் பி உதயகுமார் கூறியதாவது:–

சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப திட்டங்களை வழங்கி வருகிறேன்.திமுக தற்போது 75 ஆம் ஆண்டு முப்பெரும் விழாவை கொண்டாடியது. அதேபோல் புரட்சித்தலைவர் நூற்றாண்டு விழாவை எடப்பாடியார் கொண்டாடினார். அந்த விழா மக்களுக்கு பயனுள்ளதாக கொண்டாடப்பட்டது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் தொடங்கி 52 ஆண்டுகளில் மக்களுக்கு பல்வேறு சேவைகளை செய்துள்ளது.



69 சகவீத இட ஒதுக்கீட்டினை கொண்டு வந்து ஒன்பதாவது அட்டவணையில் ஏற்றி மகத்தான சாதனை படைத்தவர் அம்மா . அவரின் மறுவடிவமாக உள்ள எடப்பாடியார் எந்த மாநிலங்களில் இல்லாத வகையில் 7.5 சகவீத இட ஒதுக்கீடு கொண்டு வந்து அரசு பள்ளி மாணவர்களின் மருத்துவ கனவை நனவாக்கி இதனால் சமூக நீதி காவலர் என்று மக்கள் கூறுகின்றனர். இந்த இயக்கம் ஆரம்பித்து 52 ஆண்டுகளில் 32 ஆண்டு காலம் ஆளும் கட்சியாக இருந்து மக்களுக்காக சாதனைத் திட்டங்களை கொடுத்தது, முக்கியமாக பெண்கள் உரிமையை நிலை நாட்டியது.

திமுக 75 ஆண்டு காலத்தில் மக்கள் நம்பிக்கை பெற்று ஆட்சி செய்து இல்லை அண்ணாவின் மறைவுக்கு பின்பு திமுக பலமுறை எதிர்க்கட்சியாக தான் இருந்தது. இந்த 75 ஆண்டுகளில் திமுக அதிக முறை எதிர்க்கட்சியாகவும் சில முறை மட்டும் தான் ஆளுங்கட்சியாக இருந்தது. இதில் அதிமுகவில் குழப்பத்தை ஏற்படுத்திய விட்டு அதன் மூலம் தான் திமுக ஆட்சிக்கு வந்தது.

கடந்த 1989 ஆண்டுகளில் இருந்தே அதிமுகவை குழப்பிவிட்டு தான் ஆட்சிக்கு வந்தது மக்கள் நம்பிக்கை பெற்று திமுக ஆட்சிக்கு வரவில்லை. நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் கூட முதலமைச்சராக யார் வரவேண்டும் என்று மக்கள் வாக்களித்ததில் எடப்பாடியாருக்குதான் அதிக அளவில் வாக்குகள் விழுந்தன.

இன்றைக்கு இந்த இயக்கத்தை இழுத்துப் பழித்தும் சிலர் பேசுகின்றனர். தலைமைக் கழகம், இரட்டை இலை எங்குள்ளதோ அங்கு தான் உண்மையான தொண்டர்கள் இருப்பார்கள். இன்றைக்கு எடப்பாடியார் தியாக வேள்வியில் இருந்து மக்களுக்காக உழைத்து வருகிறார்.

மக்களுக்காக உழைக்கும் கட்சிகளில் அதிமுகவைதவிர எந்த கட்சியும் பிறக்கவில்லை. இனி பிறக்கப் போவதும் இல்லை.இன்றைக்கு திராவிட முன்னேற்ற கழகம் மக்கள் விரோத சக்தியாக திகழ்ந்து வருகிறது.

இன்றைக்கு சமூகநீதி, மாநில சுயாட்சி, சமதர்மம், சுயமரியாதை என்று திமுக பவள விழாவில் பேசி வருகிறார்கள். ஆனால் இன்றைக்கு முதலமைச்சர் மேடையில் அமைந்திருக்கிறார். அவருடன் உதயநிதி அமர்ந்திருக்கிறார்.

மேலும் கனிமொழியும் அமர்ந்தனர். ஆனால் கீழே மூத்த அமைச்சர்கள் அமைந்திருக்கிறார். இதன் மூலம் திமுகவின் சுயமரியாதை எங்கே போனது. மேடையில் இடமில்லையா? மு.க. ஸ்டாலின் மனதில் இடம் இல்லையா?

இன்றைக்கு மக்களுக்காக இனம் வளர வேண்டும். மொழி வளர வேண்டும் என்று அதிமுக போராடி வருகிறது .அதிமுகவில் எந்த பொறுப்புக்கும் எளிதாக வர முடியும். திமுகவில் அது போன்று வர முடியாது.

கொட்டும் மழையில் ராபின்சன் பூங்காவில் திராவிட இயக்கத்தை அண்ணா ஆரம்பித்தார் .

வாரிசு அரசியலை அவர் ஊக்குவிக்க வில்லை ஆனால் இன்றைக்கு திமுகவில் வாரிசு அரசியல் மேலோங்கி உள்ளது. இன்றைக்கு மின்கட்டணம் உயர்ந்து விட்டது, சொத்து வரி உயர்ந்துவிட்டது, தற்போது மீண்டும் சொத்து வரி உயர போகிறது. சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாக உள்ளது .

போதைப் பொருள் நடமாட்டத்தால் தமிழகமே தலை குனிந்து உள்ளது. ஆனால் இதை தீர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் 2026 தேர்தலில் எடப்பாடியாரை கோட்டைக்கும் ஸ்டாலினை வீட்டுக்கும் நீங்கள் அனுப்ப வேண்டும் என கூறினார்.

## மதுரை மீனாம்பாள்புரத்தில்

# அண்ணாவின் 116 வது பிறந்தநாள் பொதுக்கூட்டம்: செல்லூர் ராஜூ எம்.எல்.ஏ. சிறப்புரை

மதுரை செப். 19–

கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியாரின் ஆணைக்கிணங்க, பேறிஞர் அண்ணாவின் 116 வது பிறந்தநாள் பொதுக்கூட்டம் மதுரை மாநகர் மாவட்டம், வடக்கு தொகுதி கழகத்தின் சார்பில் மீனாம்பாள்புரத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வடக்கு 3 ம் பகுதி கழக செயலாளர் ஜெ.மாணிக்கம் தலைமை வகித்தார். பகுதி கழக செயலாளர் பாஸ்கரன், வி.கணேசன், கேவிகே. கண்ணன், அசோகன், என்.முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ரமேஷ், தங்கபாண்டியன், பெரியமாயன், முருகன், மணிகண்டன், ஜெயராஜ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர்.

இந்த கூட்டத்தில் மதுரை மாநகர் மாவட்ட கழக செயலாளர் கழக அமைப்புச் செயலாளரும் மேற்கு சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான செல்லூர் ராஜு சிறப்புரையாற்றினார் . இந்த கூட்டத்தில் கழக செய்தி தொடர்பாளர் காசிநாதபாரதி, மாவட்ட கழக துணைச் செயலாளர் வில்லாபுரம் ராஜா, மாவட்ட கழக பொருளாளர் குமார், பகுதி கழகச் செயலாளர் எம். ஜி.ராமச்சந்திரன், செந்தில்குமார், ஜோசப் தனுசு லால், எஸ்எம்டி. ரவி, கலைச்செல்வம், விளாங்குடி சித்தன், மாவட்ட மகளிரணி செயளாளர் சுகந்தி அசோக், மாநில எம்.ஜி.ஆர் இளைஞர் அணி இணைச் செயலாளர் முகமது ரபிக், தலைமைகளை பேச்சாளர்கள் பாவலர் ராமச்சந்திரன் எம் ஜி பாண்டியன், பிரபாகரன் வி.பி. ஆர். செல்வகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். செல்லூர் கே.ராஜு பேசியதாவது:–

திமுக முப்பெரும் விழாவை கொண்டாடி ஒரே நாளில் விழாவை முடித்து விட்டனர், ஆனால் தொடர்ச்சியாக 234 தொகுதிகளில் அண்ணாவின் பிறந்தநாள் விழாவை நாங்கள் கொண்டாடி வருகிறோம். தந்தை பெரியார்,பேரறிஞர் அண்ணா ஆகியோரை கொண்டாட திமுகவுக்கு அருகதை இல்லை. உரிமை இல்லை. அண்ணா தி.மு.க.விற்கு மட்டும் தான் அந்த உரிமை உள்ளது. அண்ணா இல்லை என்றால் எங்களை போன்ற சாமானியர் இல்லை; சாமானியர்கள் மக்கள் பணி செய்யலாம் என்ற வரலாற்றை உருவாக்கியவர் அண்ணா.

அண்ணா தி.மு.க.வில் ஜாதி, மதம் பாகுபாடு கிடையாது. 52 கால அரசியல் வரலாற்றில் 31 ஆண்டு காலம் ஆட்சிப்



பொறுப்பில் இருந்து மக்கள் நம்பிக்கையை பெற்றது. அதிமுக. ஏழை மக்கள் நிலை உயர வேண்டும் என்று எம். ஜி.ஆர். ஜெயலலிதா ஆகியோர் நினைத்தார்கள். அவர்கள் வழிவந்த எடப்பாடியார் செய்தார். 1949–ம் ஆண்டு ராபின்சென் பூங்காவில் திராவிட இயக்கத்தை அண்ணா தோற்றுவித்தார், அதனைத் தொடர்ந்து 1957–ல் 15 சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தனர். 1962–ல் 50 சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்து, படிப்படியாக 1967–யில் ஆட்சி கட்டிலில் திராவிட இயக்கத்தை அமர்த்தினார். அண்ணா கழகமே குடும்பம் என்றார். ஆனால் கருணாநிதியோ திமுகவை கம்பெனி ஆக்கிவிட்டார்.

அண்ணா சீர்திருத்த திருமணத்தை உருவாக்கினார். விதவை மறுமணம் திட்டத்தை அங்கீகரித்தார். சென்னை மாகாணத்தை தமிழ்நாடு என்று பெயர் சூட்டினார்.

அதனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த புரட்சி தலைவர் சத்துணவு திட்டம் ,ஓலை குடிசைகளுக்கு இலவச மின்சாரம் மாணவர்களுக்கு காலனி, அதனை தொடர்ந்து ஒரே கையெழுத்தில் 22,000 ரேஷன் கடையை உருவாக்கினார்,ஜெயலலிதாவோ தொட்டில் குழந்தை திட்டத்தை உருவாக்கினார். தாலிக்கு தங்கம் திட்டத்தை கொடுத்தார். அதே போல் புயலுக்கு நிவாரணம், வறட்சிக்கு நிவாரணம் என்று கொண்டு வந்தார். அவர் வழியில் வந்த எடப்பாடியார் சிறப்பாக மக்களுக்கு சேவை செய்தார்.மூன்று லட்சம் உழைக்கும் பெண்களுக்கு மானிய விலையில் இருசக்கர வாகனத்தை வழங்கினார். கொரோனா காலத்தில் 11 மாதத்தில் பணப்புழக்கம் இல்லை. அப்போது ரேஷன் கடைகள் மூலம் அரிசி, பருப்பு, சீனி ஆகியவற்றை வழங்கினார், அதேபோல் 2000 ரூபாய் நிவாரண உதவி வழங்கினார்.

நீட் தேர்வை கொண்டு வந்தது திமுக காங்கிரஸ் கூட்டணியாகவும் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முதல் கையெழுத்தால் நீட்டை விலக்குவோம் என்று உதயநிதி ஸ்டாலின் கூறினார்கள். இதுவரை செய்யவில்லை; தற்போது திமுக ஆட்சியில் நீட்டால் 13 பேர் இறந்துள்ளனர்.

எடப்பாடியார் ஆட்சி காலத்தில் நீட் தேர்வை எதிர்கொள்ள 7.5 சகவீத இட ஒதுக்கீடு கொண்டு வந்தார். அதன் மூலம் 3,466 அரசு பள்ளி மாணவர்களை மருத்துவராக உருவாக்கி உள்ளார். திமுக தேர்தல் வாக்குறுதியில் மின் கட்டணத்தை உயர்த்த மாட்டோம் என்று கூறி மூன்று முறை மின்கட்டணத்தை உயர்த்துவிட்டனர், அதேபோல் மாதம் ஒரு மின்கட்டணம் என்பதையும் செய்யவில்லை. ஐந்து பவுன் நகை அடகு வைத்தால் தள்ளுபடி என்று தேர்தல் பிரச்சாரம் செய்தனர். இதை நம்பி 48 லட்சம் பெண்கள் நகையை அடகு வைத்தனர் . இதில் 13 லட்சம் நபர்களுக்கு நகை கடனை தள்ளுபடி செய்து , மீதம் 35 லட்சம் பெண்களுக்கு ஸ்வாகா என்று சொல்லிவிட்டார்கள். அதேபோல் ஆயிரம் ரூபாய் உரிமை தொகை கூட 40 சகவீத பெண்களுக்கு தான் வழங்கப்பட்டுள்ளது. ஆயிரம் ரூபாய் கொடுத்துவிட்டு 5,000 ரூபாய் அளவில் விலைவாசி உயர்த்தி விட்டனர்.

எடப்பாடியார் ஆட்சியில் மதுரை மக்களின் குடிநீர் பிரச்சனை போக்க 1296 கோடியில் குடிநீர் திட்டத்தை கொண்டு வந்தார். இதன் மூலம் மதுரையில் தற்போது 20 லட்சம் மக்கள் உள்ளனர். 40 லட்சம் மக்கள் தொகை வந்தாலும் கூட குடிநீர் பிரச்சினை சமாளிக்க முடியும்.

அதேபோல் ஸ்மார்ட் திட்டத்தின் கீழ் மதுரைக்கு வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கினார். வைகை ஆற்றில் மூன்று தடுப்பணைகள்; குடிமராமத்து திட்ட பணிகள் ஆகியவற்றை உருவாக்கினார்.

மதுரையில் நான்கு பாலங்களை உருவாக்கி கொடுத்தார். இப்படி 8,000 கோடி அளவில் மதுரை மாவட்டத்திற்கு திட்டங்களை கொடுத்தார். தற்போது திமுகவில் இரண்டு அமைச்சர்களும் இருந்தும் சல்லி பைசா கூட மதுரைக்கு ஒதுக்கப்படவில்லை. தற்பொழுது 216 கோடியில் கருணாநிதிக்கு நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 200 கோடியை மதுரை மாநகராட்சி ஒதுக்கினால் கூட குண்டும் குழியுமாக இருக்கும் சாலைகளை சீர்படுத்த முடியும்.

பள்ளிக்கூட வாசலில் முன்பு நெல்லிக்காய், புளிப்பு மிட்டாய் போன்றவை விற்கப்பட்டு வந்தது. தற்போது கஞ்சா மிட்டாய்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த அம்மா ஆட்சி காலத்தில் பத்தாண்டுகளாக கள்ளச்சாரய சாவு இல்லை தற்போது தமிழகத்தில் கள்ளச்சாராயம் ஆறாக ஓடி கள்ளச்சாரய மரணம் மரணங்கள் அதிகரித்து விட்டன. மதுக்கடையை மூடுவோம் என்று கடந்த சட்டமன்றத் தேர்தலில் திமுக கூறிய கோரிக்கை என்ன ஆச்சு? தற்போது திருமாவளவன் மது ஒழிப்பு மாநாட்டுக்கு திமுக கலந்து கொள்வது வேடிக்கையாக உள்ளது. ஏற்கனவே கனிமொழி தமிழகத்தில் இளம் விதவைகள் அதிகரித்து விட்டது என்று கூறினார். தற்பொழுது பல மடங்கு விதவைகள் அதிகரித்து விட்டது இதை தனது அண்ணன் ஸ்டாலின்யிடம் கூறுவாரா? கடந்த 2006 முதல் 2011 வரை திமுக ஆட்சியில் ரவுடி தொல்லைகள் அதிகரித்து இருந்தது, அதை தொடர்ந்து 2011யில் அம்மா ஆட்சிக்கு வந்தவுடன் 250 ரவுடிகளை உள்ளே தள்ளினார்கள். இதன் மூலம் மதுரை அமைதியாக இருந்தது. கஞ்சா கடத்தலில் திமுக புள்ளிகள் உள்ளனர் .ஏற்கனவே ஜாபர் சாதிக் 2000 கோடியில் கஞ்சா கடத்தியதாக கைது செய்யப்பட்டார். இந்த சம்பவத்தை மத்திய அரசு ,மாநில அரசு கூறவில்லை. அமெரிக்காவில் உள்ள உளவுபிரிவு தகவல் கொடுத்த பின்பு தான் ஜாபர் சாதிக் கைது செய்யப்பட்டார். இந்த ஜாபர் சாதிக் முதலமைச்சர், உதயநிதி, காவல் ஐஜி ஆகியோருடன் போட்டோ எடுத்து உள்ளார்.

அதேபோல் தமிழகத்தில் சட்ட ஒழுங்கு மிகவும் சீர்கெட்டு உள்ளது. பெண் குழந்தைகள் கூட வெளியே நடமாட அச்சபட்டு வருகிறார்கள், இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். உலக முதலீட்டு மாநாடு என்று மக்களை ஏமாற்றிய இந்த திமுக ஆட்சியை விரட்டி விட்டு மீண்டும் தமிழகத்தை வளர்ச்சிப் பாதை கொண்டு செல்ல எடப்பாடியாரை முதலமைச்சராக்க வேண்டும் என்று கூறினார்.

# போடி நகர் மன்ற தலைவர் அலுவலகத்தில் பொதுமக்கள் குறை தீர்க்கும் மனுப்பெட்டி

தேனி, .செப். 19–

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் நகராட்சி நகர் மன்ற தலைவர் ராஜராஜேஸ்வரி சங்கர் நகராட்சி உள்ள தன்னுடைய அலுவலகத்தில் பொதுமக்கள் குறை தீர்க்கும் மனுப்பெட்டி வைத்துள்ளார். அதில் நகராட்சியில் உள்ள 33 வார்டு பொதுமக்களும் தங்களுக்கு தேவையானது அடிப்படை தேவைகளை மனுவாக அழித்து வருகிறார்கள். இதன்படி இந்த மனுவை நேரடியாக எடுத்து சம்பவ இடத்துக்கு சென்று அப்பகுதி மக்களின் மனு குறித்து சம்பந்தப்பட்ட நகராட்சி அதிகாரிகளிடம் கூறி குறைகளை நிவர்த்தி செய்வது போடி நகர மன்ற



தலைவரின் சிறப்பான மக்கள் சேவையாக பொதுமக்கள் பாராட்டி வருகிறார்கள். இதன்படி மனு அளிக்கப்பட்ட போடிநாயக்கனூர் 20–வது வார்டு பகுதிகளில் அப்பகுதி மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை மனு அளித்தனர். இந்த மனுவை உடனடியாக பரிசீலனை செய்த நகர் மன்ற தலைவர் அந்த இடத்தில் வாட்டர் டேங்க் கட்டி குழாய் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் கிடைக்க ஏற்பாடுகள் செய்து அதனை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்த நகர் மன்ற தலைவர் ராஜராஜேஸ்வரி சங்கர் மற்றும் அதன் மனுவை பரிசீலனை செய்து நிதி ஒதுக்கி நடவடிக்கை எடுத்த நகராட்சி ஆணையாளர் கா.ராஜலட்சுமி பொறியாளர் வி.குணசேகரன் மேலாளர் முனிராஜ் மற்றும் நகராட்சி அதிகாரிகள் மற்றும் அலுவலர்களை இந்த பகுதிபொது மக்கள் மனதார பாராட்டினார்கள்.

# நத்தம் அருகே அரசு அனுமதியின்றி மதுபாட்டில்கள் விற்றவர் கைது: 403 மதுபாட்டில்கள் பறிமுதல்

நத்தம், செப். 19

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதியில் அரசு அனுமதியின்றி மதுபாட்டில்கள் விற்பனை செய்யப்படுவதாக மாவட்ட துணை போலீஸ் சூப்பிரண்டு சிபி சாய் சௌந்தர்யனுக்கு புகார்கள் சென்றது. அதன் பேரில் நத்தம் அருகே மணக்காட்டூர் பகுதியில் போலீஸ் இன்ஸ்பெக்டர் தங்கமுனியசாமி, சப் இன்ஸ்பெக்டர் தர்மர் உள்ளிட்ட போலீசார்கள் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது



மணக்காட்டூரில் வீட்டில் வைத்து பாஸ்கரன் (54) என்பவர் மது விற்பனை செய்து கொண்டிருந்தது தெரியவந்தது. இதையடுத்து அவரை கைது செய்த போலீசார் அவரது வீட்டில் இருந்து 403 மதுபாட்டில்களையும் ரூ.6090 பணத்தையும் பறிமுதல் செய்தனர்.

# எம்.வாடிப்பட்டியில் பிரதமர் நரேந்திர மோடி 74–வது பிறந்தநாள்: மாணவ மாணவிகளுக்கு விலையில்லா கல்வி உபகரணங்கள் வழங்கினர்

வத்தலகுண்டு, செப். 19–

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு வடக்கு ஒன்றியம் சார்பாக எம். வாடிப்பட்டியில் பாரத பிரதமர் நரேந்திர மோடியின் 74–வது பிறந்த நாளை முன்னிட்டு அனைத்து கிராம கோவில்களிலும் விசேஷ பூஜைகள் செய்து இனிப்புகள் வழங்கி மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு வடக்கு ஒன்றிய செயலாளர் முத்துப்பாண்டி தலைமை வகித்தார்.

வடக்கு ஒன்றிய தலைவர் அன்புச் செழியன் துணைத் தலைவர்கள் எஸ் முருகானந்தம் முருகானந்தம் ஆகியோர் முன்னிலை வைத்தனர். சிறப்பு விருந்தினராக திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொதுச்



செயலாளர் கோவிந்தராஜ் மாநில கூட்டுறவு பிரிவு துணைச் செயலாளர் முத்துராமலிங்கம் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் அழகுமணி ஆகியோர் கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இவ்விழாவில் தெற்கு ஒன்றிய தலைவர் செந்தில்குமார் மாவட்ட மகளிர் அணி செயலாளர் வினோதினி மாநில செயற்குழு உறுப்பினர் பி.ஆர். சீனிவாசன் வத்தலகுண்டு பொதுச்செயலாளர் முத்துராமன் மற்றும் சார்பு அணியினர் கட்சி நிர்வாகிகள் மகளிர் அணியினர் என பலர் கலந்து கொண்டு கிராம கோவில்களில் சிறப்பு அபிஷேகம் செய்து பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி அரசு மருத்துவ மனையில் உள் நோயாளிகளாக இருக்கும் 50க்கும் மேற்பட்டோருக்கு பால் ரொட்டி பழம் என நலத்திட்ட உதவிகள் செய்து சிறப்பாக கொண்டாடினர்.

# திருச்செந்தூர் விபத்தில் மூளைச்சாவு அடைந்த தொழிலாளியின் உடலுக்கு அரசு சார்பில் மரியாதை

திருச்செந்தூர், செப். 19–

திருச்செந்தூர் அருகே விபத்தில் மூளைச்சாவு அடைந்த காயாமொழி தொழிலாளியின் உடலுக்கு அரசு சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது.

காயாமொழி, ராமநாதபுரத்தைச் சேர்ந்தவர் இசக்கிமுத்து (42). பெயிண்டிங் வேலை செய்து வந்தார். இவரது மனைவி சத்யா குழந்தை இல்லை. இவர் வீரபாண்டியன்பட்டணம். சண்முகபுரத்தில் வாடகைக்கு வீடு எடுத்து தங்கியுள்ளார். கடந்த 14ம் தேதி காலை 6 மணிக்கு வேலைக்கு செல்வதற்காக வீட்டில் இருந்து திருச்செந்தூர், குமாரபுரம் அருகே பைக்கில் வந்து கொண்டிருந்த போது அடையாளம் தெரியாத வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியது. இதில் படுகாயமடைந்து சாலையில் கிடந்துள்ளார். இவரை அங்கிருந்தவர்கள் மீட்டு திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அங்கு மூளைச்சாவு அடைந்து கடந்த 15ம் தேதி உயிரிழந்தார். இந்நிலையில் அவரது மனைவி விருப்பத்தின் படி இசக்கிமுத்துவின் உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டது. இதையடுத்து உறுப்புகள் தானம் செய்யப்பட்ட அவரது உடல் காயாமொழிக்கு இன்று காலை கொண்டு வரப்பட்டது. அரசு உத்தரவின் பேரில் இசக்கிமுத்துவின் உடலுக்கு திருச்செந்தூர் கோட்டாட்சியர் சுகுமாறன், தாசில்தார் பாலசுந்தரம், மாவட்ட சுகாதரப்பணிகள் இணை இயக்குனர் மருத்துவர் பொன்ரவி, எஸ்.ஐ. பாபுராஜ் ஆகியோர் மாலை அணிவித்து அரசு சார்பில் மரியாதை செலுத்தினர்.

# திருச்சியில் சேது எக்ஸ்பிரஸ் ரயிலில் தனியாக கழன்று ஓடிய 3 பெட்டிகள்: அதிகாரிகள் விசாரணை

திருச்சி, செப். 19–

ராமேசுவரத்திலிருந்து சென்னைக்கு நேற்று முன்தினம் இரவு புறப்பட்ட சேது எக்ஸ்பிரஸ் ரயில் புதன்கிழமை அதிகாலை 1.20 மணிக்கு திருச்சி ரயில் நிலையத்துக்கு வந்து, 1.40 மணிக்கு சென்னைக்குப் புறப்பட்டது.

நடைமேடையிலிருந்து சுமார் 100 மீட்டர் சென்ற நிலையில் ரயிலின் கடைசியில் இருந்த எஸ் 1 பெட்டி, பொதுப்பெட்டி மற்றும் மகளிர் பெட்டி என 3 பெட்டிகள் தனியாகக் கழன்றன. இதனால் அந்த 3 பெட்டிகளிலும் இருந்த பயணிகள் அதிர்ச்சியடைந்து, கூச்சலிட்டனர். இதையறிந்த ரயில் லோகோ பைலட் உடனடியாக ரயிலை நிறுத்தினார். மேலும் கழன்ற பெட்டிகள் சிறிது தூரம் ஓடி நின்றன.

தகவலறிந்து வந்த ரயில்வே பொறியாளர்கள், ஊழியர்கள் உடனடியாக ரயில் பெட்டிகளை இணைக்கும்



பணியில் ஈடுபட்டனர். பணிகள் நிறைவடைந்து சுமார் ஒரு மணி நேரம் தாமதமாக, அதிகாலை 2.30 மணியளவில் ரயில் புறப்பட்டுச் சென்றது. “ரயிலில் இருந்து பெட்டிகள் கழன்றது குறித்து சென்னை பராமரிப்பு பணிமனையில் விசாரணை நடத்தப்படும். இது தொடர்பாக இங்கிருந்து ஒரு அறிக்கை அனுப்பப்படும். இந்த சம்பவத்தால் பயணிகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை” என ரயில்வே நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.


kotak Kotak Mahindra Bank

ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை – 400 051

கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006.

லேண்ட் மார்க்: எம்ஜி கார் ஷோரூம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையம் அருகில்

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு. புல்லர்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் (இனி “FIHFCL” என்று குறிப்பிடப்படும்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், 28.06.2021 அன்று

JM FINANCIAL HOME LOANS

ஜெஎம் பைனான்ஷியல் ஹோம் லோன்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 3வது தளம், சுவாஷிஷ் ஐடி பார்க், மனை எண்.68இ, தத்தா படா சாலை அருகில், டாடா ஸ்டீல் எதிரில், போரிவாலி (கி), மும்பை – 400 066.

சுவாதீன அறிவிப்பு

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம், பிரிவு 13(4), 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 8(1)வது விதிமுறை கீழ். (பிற்சேர்க்கை IV)

கீழே கையொப்பமிட்டுள்ள ஜெஎம் பைனான்ஷியல் ஹோம் லோன்ஸ் லிமிடெட்டின் (இனி JMFHLL என குறிப்பிடப்படும்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன